**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.**

**அ.வ.எண். 39/2016**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | 20.02.2026 |
| **பெயர்** | **தெய்வசிகாமணி** |
| **த/பெ** | **தனபால்** |
| **சாட்சி** | **DW1** |

**விசாரணை தொடங்கும் நேரம்–** 11.14.**a.m**

**குறுக்கு விசாரணை–**

1. நான் இவ்வழக்கின் 4ம் பிரதிவாதியாவேன். 1ம் பிரதிவாதி என் தாயார். 3ம் பிரதிவாதி காலமாகிவிட்டார். அவரின் வாரிசுகள் தான் சண்முகம், யமுனா மற்றும் சதீஷ். தனபால்ரெட்டி என் தந்தை. வாதிகள் எந்த சர்வே எண்ணிற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்றால் பழைய சர்வே எண் 175. புதிய சர்வே எண் 175/4. அதன் மொத்த விஸ்தீர்ணம் 1 ஏக்கர் 36 செண்ட் ஆகும். வழக்கிற்கு என் பெயரில் பட்டா இல்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தின் 4 எல்லைகள் தெரியுமா என்றால் தெற்கில் சுப்பிரமணிரெட்டி சொத்து, வடக்கில் இராஜகோபால் சொத்து, கிழக்கே 3–ம் நபருடையது. மேற்கே ரோடு உள்ளது.

2. எனது பிரமாணவாக்குமூலத்தில் பி.சா.ஆ1 ஆவணம் குறிப்பிட்டுள்ளேன். அந்த ஆவணத்தின படி சர்வே எண்கள் 174, 175 மற்றும் 176/1 அதன் மொத்த விஸ்தீர்ணம் 3 ஏக்கர் 90 செண்ட். சர்வே எண் 175–ல் எவ்வளவு விஸ்தீர்ணம் என்றால் தெரியாது. என் தாத்தாவின் பெயர் பொன்னுசாமிரெட்டி. அவருக்கு குப்புசாமிரெட்டி , இராஜகோபால் ரெட்டி, சுப்பிரமணிரெட்டி, தனபால்ரெட்டி மற்றும் எட்டியப்பரெட்டி என்று 5 பிள்ளைகள். குப்புசாமிரெட்டி தான் மூத்தவர். 1954ல் பி.சா.ஆ1 மூலம் கிரையம் பெற்றவர் இராஜகோபால்ரெட்டி என்றால் சரியல்ல, மூத்தவர் என்பதால் அவர் பெயரில் வாங்கப்பட்து.

3. குப்புசாமி தான் மூத்தவர் என்பதால் அவர் பெயரில் தான் வாங்கி இருக்க வேண்டும் என்றால் குப்புசாமி ரெட்டிக்கு திருமணம் ஆன பிறகு அவர் தனியாக சென்றுவிட்டார். மேற்சொன்ன சங்கதிகைள என் பதிலுரையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 1954 ல் நான் பிறக்கவில்லை என்றால் சரிதான். அதனால் மேற்சொன்னவாறு 4 நபர்களும் சேர்ந்து வாங்கிய விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அதனால் இராஜகோபால்ரெட்டிக்கு பி.சா.ஆ 1 ஆவணம்படி அவருக்கு சொந்தமானது என்று கூறினால் அதனை மறுக்க முடியாது என்றால் சரிதான்.

4. வா.சா.ஆ– 1, 23.06.1997–ல் ஆவணம் எண் 1906/1997 அதில் முனுசாமி நாயுடு மகன் இரங்கநாத நாயுடு அவர்களுக்கு பொன்னுசாமிரெட்டியாரின் மகனான இராஜகோபால்ரெட்டியின் மகன்கள் கிரையம் செய்ததாக உள்ளது என்றால் சரிதான். பழைய சர்வே எண் 175, புதிய சர்வே எண் 174/4 – 1 ஏக்கர் 25 செண்ட் கிரையம் செய்ததாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஜமுனாராணிக்கு 06.04.1998–ல் இரங்கநாதநாயுடு, அவரின் மகன்கள் மற்றும் மகள்கள் அனைவரும் சேர்ந்து கிரையம் செய்துள்ளனர் அது வா.சா.ஆ –2 ஆக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. வா.சா.ஆ–2 ஆவணத்தில் சர்வே எண் 175, 1 ஏக்கர் 25 செண்ட் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அதன் பிறகு வா.சா.ஆ–3 மூலம் பட்டா ஜமுனாராணி பெயரில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் பட்டா என் பெயரில் இல்லை 1993 லேயே எங்கள் பெயருக்கு செட்டில்மெண்ட் ஆகிவிட்டது. பட்டா எங்களுக்கு தெரியாமல் பட்டா மாற்றம் செய்துள்ளனர். 19.10.2005–ல் ஜமுனாராணியிடம் இருந்து வாதி சுமித்ரா என்கிற டில்லியம்மாள் சர்வே எண் 175/4 ஐ கிரையம் வாங்கியுள்ளார் என்றால் தெரியாது.

6. மேற்சொன்ன கிரைய பத்திரத்தை நாங்கள் நீதிமன்றத்தில் பி.சா.ஆ– 3 ஆக தாக்கல் செய்துள்ளோம் என்றால் பார்த்தால் தான் தெரியும்.

**( மேலும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**

**விசாரணை முடியும் நேரம். 11.35. a.m.**